# காஞ்சிபுரம், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறைகள்

## முன்னிலை. முனைவர் வே.க.சண்முகம், இ.ஆ.ப.,

ந.க.7913/2010/என்.1 நாள்.26.08.2015

பொருள் நிலம் - சான்று - காஞ்சிபுரம் மாவட்டம் - தாம்பரம் வட்டம் - கடப்பேரி கிராமம் - புல எண்.38/1, 2, 3, 4-ல் உள்ள தங்களின் தொழிற்பிரிவிற்கு செல்ல மேற்படி கிராம புல எண்.1 உள்ள பாதையை தவிர வனமற்ற மாற்று நிலம் இல்லை என்று திரு.பாஸ்கர்ராவ், திரு.செல்வம், திரு.சண்முகையா மற்றும் திரு.ஏழுமலை ஆகியோர் சான்று கோரி உத்தரவிடல் - தொடர்பாக.

பார்வை.
1. திரு.பாஸ்கர்ராவ், திரு.செல்வம், திரு.சண்முகய்யா, திரு.ஏழுமலை ஆகியோர் மனு
2. இவ்வலுவலக கடிதம் எண்.7913/2010/என்.1/ நாள்.04.03.2010
3. தாம்பரம் வட்டாட்சியர் கடிதம் எண்.530/2010/அ1/ நாள்.02.08.2010
4. தாம்பரம் வருவாய் கோட்ட அலுவலர் கடிதம் எண்.2013/2010/அ/நாள்.06.09.2010

-----

உத்தரவு

காஞ்சிபுரம் மாவட்டம், தாம்பரம் வட்டம், கடப்பேரி கிராமம், புல எண்.38/1, 2, 3, 4-ல் ஆகியவற்றில் உள்ள தொழிற்பிரிவிற்கு சென்று வர வனநிலத்தை தவிர வனமற்ற மாற்று நிலம் இல்லை என திரு.பாஸ்கர்ராவ், திரு.செல்வம், திரு.சண்முகய்யா, திரு.ஏழுமலை ஆகியோர் கோரியதன்பேரில் தாம்பரம் வட்டாட்சியர் மற்றும் வருவாய் கோட்ட அலுவலர் அறிக்கை அனுப்பியுள்ளார்கள்.

காஞ்சிபுரம் மாவட்டம், தாம்பரம் வட்டம், கடப்பேரி கிராமம், புல எண்.38/2-ல் 0.85 ஏக்கர் நிலத்தினை கிரயம் பெற்று "சந்தியா புளூ மெட்டல்" என்ற கல் உடைக்கும் கிரஷரை அமைத்து திரு.பாஸ்கர்ராவ் த/பெ வெங்கடராமைய்யா என்பவர் தொழில் நடத்தி வருவதாக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், மேற்படி வட்டம், மேற்படி கிராமம் புல எண்.38/3-ல் 0.87 ஏக்கர் நிலத்தை கிரயம் பெற்று "சரஸ்வதி புளூ மெட்டல்" என்ற கல் உடைக்கும் கிரஷரை அமைத்து திரு.செல்வம் த/பெ ரர்ஜா நாடார் என்பவர் தொழில் நடத்தி வருவதாக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதுபோல காஞ்சிபுரம் மாவட்டம், தாம்பரம் வட்டம், கடப்பேரி கிராமம், புல எண்.38/1-ல் திருமதி.விமலா குப்தா என்பவரால் கிரயம் பெறப்பட்ட நிலத்தை மேற்படி நபரிடமிருந்து நிலத்தின் ஒரு பகுதியை திரு.சண்முகைய்யா த/பெ சுப்பையா என்பவர் குத்தகைக்கு பெற்று "சக்திவேல் புளூ மெட்டல்" என்ற கிரஷரையும், நிலத்தின் மற்றொரு பகுதியை திரு.ஏழுமலை த/பெ கதிர்வேலு என்பவர் குத்தகைக்கு பெற்று "காமாட்சி புளூ மெட்டல்" என்ற கிரஷரையும் அமைத்து தொழில் நடத்தி வருகின்றனர் என அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேற்படி, தொழில் நடத்துவதற்கு வணிக துறை மற்றும் மாசு கட்டுப்பாடு வாரியம் மூலம் உரிமம் பெற்று தொழில் நடத்துவதாகவும் மேற்படி தொழில் பிரிவுகளுக்கு புல எண்.38-க்கு பக்கத்தில் உள்ள பராமரிக்கப்படாத மண் சாலையை தவிர வேறு பாதை வசதி இல்லை என்றும் மேற்படி பாதை காப்பு வன புல எண்.39-ல் அமைந்துள்ளது என்றும் அதன் பரப்பளவு 11.05.0 ஹெக்டேர் என்றும் மேற்படி புலம் புலிக்கொரடு காப்பு காடு என கிராம கணக்கில் தாக்கலாகியுள்ளது எனவும், அது நகர புல எண்.1-னுடன் சேர்க்கப்பட்டுள்ளது. எனவும் இதன் பரப்பளவு 110450 ச.மீ எனவும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. வட்டாட்சியர் கிரய பத்திர நகல் கிராம கணக்கு நகல்கள் நகர நில அளவை பதிவேடு நகல், புல வரைபடம் ஆகியவற்றை இணைத்து அனுப்பியுள்ளார். நகல் நில அளவை பதிவேட்டில் புல எண்.1-ல் ஒதுக்கப்பட்ட காடு எனவும், நகர புல எண்2-ல் (பழைய புல எண்.38/1) 0.3550 ச.மீ நிலம் விமலா குப்தா என்பவருக்கு உரிமையானது எனவும் நகர புல எண்.3-ல் (பழைய புல எண்.38/2பி 2300 ச.மீ நிலம் வெங்கட்ராமையா மகன் பாஸ்கர்ராவ் என்பவருக்கு உரிமையானது எனவும் புல எண்.6-ல் (88/3பி) 02350 ச.மீ நிலம் இளைய நாடார் மகன் ராஜ நாடார் என்பவருக்கு உரிமையானது எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி, மனுதாரர்களின் கோரிக்கை குறித்து தொழிற்பிரிவிற்கும் சென்று வர தாம்பரம் வட்டம், கடப்பேரி கிராமம், புல எண்.39 (நகர புல எண்.1)-ல் உள்ள மண்சாலையை தவிர வனமற்ற மாற்று நிலம் இல்லை என வட்டாட்சியர் தாம்பரம் மற்றும் வருவாய் கோட்ட அலுவலர், தாம்பரம் ஆகியோர் தங்கள் அறிக்கையில் தெரிவித்துள்ளனர்.

மேற்படி தனியர்கள் சென்னை உயர்நீதிமன்றத்தில் தொடர்ந்த W.P.No.11174/2009 முதல் 11177/2009 வரை மற்றும் M.P.No.1 to 1/2009 and 2 to 2/2009, நாள்.14.10.2009 நாளிட்ட தீர்ப்பின் அடிப்படையில் தொடர்ந்து காஞ்சிபுரம்

மாவட்டம், தாம்பரம் வட்டம், கடப்பேரி கிராமம், புல எண்.38/1, 2, 3, 4-ல் உள்ள தொழிற்பிரிவிற்கு சென்று வர மேற்படி வட்டம் மற்றும் கிராமம் புல எண்.1-ல் உள்ள நிலத்தை தவிர வனமற்ற மாற்று நிலம் இல்லை என சான்று வழங்கி உத்திரவிடப்படுகிறது.

மாவட்ட ஆட்சித்தலைவர்
காஞ்சிபுரம்

26/8/15

பெறுநர்

1. திரு.பாஸ்கர்ராவ்
த/பெ வெங்கட்ராமையா
தி/ள் சந்தியா புளு மெட்டல்
கடப்பேரி கிராமம்,
தாம்பரம் வட்டம்

2. திரு.செல்வன்,
தி/ள் சரஸ்வதி புளு மெட்டல்
கடப்பேரி கிராமம்,
தாம்பரம் வட்டம்

3. திரு.சண்முகய்யா,
தி/ள் சக்திவேல் புளு மெட்டல்
கடப்பேரி கிராமம்,
தாம்பரம் வட்டம்

4. திரு.ஏழுமலை
தி/ள் காமாட்சி புளு மெட்டல்
கடப்பேரி கிராமம்,
தாம்பரம் வட்டம்

5. வருவாய் கோட்ட அலுவலர்,
தாம்பரம்.

6. வட்டாட்சியர்,
தாம்பரம்

Rc.No.7913/2010/N1
Dt.26/08/2015

Collector's Office,
Kancheepuram

## CERTIFICATE

Certified that no alternative non- forest land is available for ingress and egress road to the crusher unit Thiru.Baskara Rao (M/s Sandhya Blue Metal), Thiru.Sanmugaiya (M/s Sakthivel Blue Metal) and Thiru.Elumalai (Kamatchi Blue Metal) in S.Nos.38/1, 2, 3, 4 in Kadapperi Village, Tambaram Taluk except the forest land in S.No.1 in Kadapperi Village, Tambaram Taluk.

26/8/15

DISTRICT COLLECTOR
KANCHEEPURAM.

To

1. Thiru.Baskara Rao,
   S/o Venkattaramaiya,
   M/s Sandhya Blue Metal,
   Kadapperi Village,
   Tambaram Taluk

2. Thiru.Sanmugaiya,
   S/o Subbaiya,
   M/s Sakthivel Blue Metal
   Kadapperi Village,
   Tambaram Taluk.

3. Thiru.Elumalai,
   S/o Kathirvelu,
   Kamatchi Blue Metal,
   Kadapperi Village,
   Tambaram Taluk